ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2120/2 - 2019 අප්‍රේල් මස 22 වැනි සඳුදා - 2019.04.22

*2120/2 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு (முதலாவது திருத்தம்)

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.23 ஆந் திகதிய 1855/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
*கல்வி அமைச்சு.*

*கல்வி அமைச்சு,*
“இசுருபாய”,
பெலவத்த,
பத்தரமுல்ல,
*2019, ஏப்பிறல் 10.*

| தொடர் இலக்கம் | அத்தியாயம் மற்றும் வரிசை | திருத்தங்கள் |
|---|---|---|
| 01 | 5.2 | 2008.07.01 ஆம் திகதி அல்லது அதன் பிறகு பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவர் பட்டத் தகைமையை, பட்டதாரி ஆசிரியர் ஒருவர் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமையை, பயிற்சி ஆசிரியர் ஒருவர் கல்விமாணிப் பட்டத் தகைமையை தரம் 2-II இல் ஏழு வருடங்களுக்குள் (07) பெற்றுக்கொள்ளுமிடத்து, அல்லது பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப் பட்டத் தகைமைகளைக் கொண்ட பட்டதாரி ஆசிரியர் ஒருவர், தரம் 2-II இல் ஐந்து (05) வருடங்களுக்குள் கல்வி முதுமாணிப் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அந்த தகைமையைப் பெற்றுக்கொண்ட திகதியில் இருந்து அ.நி.சு இலக்கம் 06/2006 (XII) அட்டவணை 1இல் உரிய சம்பளப் படிமுறையில் அல்லது உரிய சம்பளப் படிமுறையைக் கடந்திருக்கும் பட்சத்தில் தாபன விதிக்கோவையின் VII: அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் கீழான சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படுவார். |
| 02 | 5.1.1.1 | ஜீ.ஈ.-1-2006 சம்பளம் - ரூ.13,410-145x6-180x7-215x2-15,970 |
| 03 | 5.1.1.2<br>குறிப்பு 3 | இச் சேவையின் 3-I(ஆ) தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் :<br><br>இந்த ஆசிரியர்கள் பட்டத் தகைமையை அல்லது கல்விமாணிப் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொள்ளுமிடத்து தரம் 2-II இற்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் அந்த தரத்தின் சம்பள அளவுத்திட்டத்தின் 3 ஆவது படிமுறையில் அமர்த்தப்படுவார். |
| 04 | 5.1.1.2<br>குறிப்பு 4 | இந்த சேவையின் 3-I(ஆ) தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட போதனாவியல் பயிற்சி பெறாத பட்டதாரி ஆசிரியர்கள்;<br><br>இந்த ஆசிரியர்கள் பட்டப்படிப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமையை அல்லது கல்விமாணிப் பட்டத்தகைமையை அல்லது கல்வி முதுமாணி பட்டத் தகைமையைப் பெற்றுக்கொள்ளுமிடத்து தரம் 2-II இற்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் அச்சம்பள அளவுத்திட்டத்தின் 5 ஆவது படிமுறையில் அமர்த்தப்படுவார். |
| 05 | 7.2.6.3 | சேவையின் தரம் 3-II இலிருந்து தரம் 2-II இற்கு நியமித்தல்:<br><br>(1) தரம் 2-II இற்கு நியமிப்பதற்குத் தேவையான மேற்படி 7.2.2.1(உ) இன் (1) க்கு அமைவாக பிரமாணக் குறிப்பின் 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பின் தரம் 2-II இற்கு நியமிக்கப்படுவார். |
| 06 | 7.2.6.4 | சேவையின் தரம் 3-I(இ) இற்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தரம் 2-II இற்கு நியமித்தல்: (1) தரம் 2-II இற்கு நியமிப்பதற்குத் தேவையான மேற்படி 7.2.2.1 (உ) இன் (1) இற்கு அமைவாக பிரமாணக் குறிப்பின் 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பின் தரம் 2-II இற்கு நியமிக்கப்படுவார். |
| 07 | 7.2.6.6 | சேவையின் தரம் 3-I(அ) இலிருந்து தரம் 2-II இற்கு நியமித்தல்:<br><br>(1) பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமையைப் பெற்றுக்கொள்ளுமிடத்து தரம் 2-II இற்கு நியமிக்கப்படுவார். |
| 08 | 10.5 | பழைய பிரமாணக் குறிப்பின் கீழ் 2008.07.01 ஆம் திகதியில் இருந்து 2010.12.31 வரையான காலப்பகுதிக்குள் 05 வருட சேவைக் காலத்தின் அடிப்படையில் வகுப்பு 1க்கு பதவியுயர்வுப் பெற்ற அல்லது பயிற்சிப் பெறாத காலத்திற்கான புள்ளிகள் வழங்கும் முறைமையின் அடிப்படையில் அல்லது அமுலில் உள்ள வேறு விதிமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் புதிய பிரமாணக் குறிப்பின் கீழ் திருத்தியமைக்கப்படல் ஆகாது. |
| 09 | 10.2.1.1.(III) | தொழில் மீளாய்வு உள்ளடங்களாக அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்படும் தினத்திற்கு உடன்முன்னரான மூன்று (3) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை காட்டியிருத்தல். |

| தொடர் இலக்கம் | அத்தியாயம் மற்றும் வரிசை | திருத்தங்கள் |
|---|---|---|
| 10 | 10.3.2 | அமுலாகும் தினத்திற்கு தரம் 2-IIஇல் உள்ள ஆசிரியர் பயிற்சி பெற்ற அல்லது பட்டத்துக்கான தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்கள் மற்றும் அதன் பின்னர் தரம் 2-II 07 வருடங்களுக்குள் பட்டத்தகைமைகளைப் பெறும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தரம் 2-I இற்கு பதவி உயர்த்தப்படுவார். |
| 11 | 10.3.3 | அமுலாகும் தினத்திற்கு தரம் 2-II இல் உள்ள பட்டத் தகைமை மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமை அல்லது கல்விமாணிப் பட்டத்திற்கான தகைமையைக் கொண்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதன் பின்னர் தரம் 2-II இல் 07 வருடங்களுக்குள் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமைகளைப் பெறும் பட்டதாரி ஆசிரியர்கள் தரம் 2-I இற்கு பதவி உயர்த்தப்படுவார். |
| 12 | 10.3.4 | அமுலாகும் தினத்திற்கு 2-II தரத்தில் உள்ள பட்டத் தகைமை, பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப் பட்டத் தகைமை அல்லது கல்வி முதுமாணிப் பட்டத் தகைமையைக் கொண்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதன் பின்னர் தரம் 2-II இல் 05 வருடங்களுக்குள் கல்வி முதுமாணி பட்டத் தகைமையைப் பெறும் பட்டதாரி மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப் பட்டத்தகைமையைக் கொண்ட ஆசிரியர்கள் தரம் 2-I இற்கு பதவி உயர்த்தப்படுவார். |
| 13 | குறிப்பு 12 | தரம் 2-II இற்கு உள்வாங்கும் போது 2008.07.01 ஆம் திகதிக்கு ஆசிரியர் பயிற்சி மற்றும் பட்டம் அல்லது பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமை அல்லது கல்விமாணி பட்டத்திற்கான தகைமைகளைக் கொண்டுள்ள ஆசிரியர்கள் அ.நி.சு. இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை II இல் 10 ஆம் நிரலின் கீழ் உள்ள சம்பளப் படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அதற்கிணைவான சம்பளப் படிமுறையிலும், பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப் பட்டம் மற்றும் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றுள்ள ஆசிரியர்கள் உப அட்டவணை II இல் 11 ஆம் நிரலின் கீழ் உள்ள சம்பளப் படிமுறையை அடிப்படையாகக் கொண்டு அதற்கிணைவான சம்பள படிமுறையில் அமர்த்தப்படுவார். |
| 14 | குறிப்பு 13 | தரம் 2-I இற்கு உள்ளீர்ப்புச் செய்யும் போது 2008.07.01 ஆம் திகதிக்கு ஆசிரியர் பயிற்சி மற்றும் பட்டம் அல்லது பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமை அல்லது கல்விமாணி பட்டத்திற்கான தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்கள் அ.நி.சு. இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை II இல் 10 ஆம் நிரலின் கீழ் உள்ள சம்பளப் படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அதற்கிணைவான சம்பளப் படிமுறையிலும், பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப் பட்டம் பெற்றுள்ள ஆசிரியர்கள் உப அட்டவணை II இல் 11 ஆம் நிரலின் கீழ் உள்ள சம்பளப் படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அதற்கிணைவான சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படுவார். |
| 15 | குறிப்பு 14 | தரம் 1 இற்கு உள்ளீர்ப்புச் செய்யும் போது 2008.07.01 ஆம் திகதிக்கு ஆசிரியர் பயிற்சி மற்றும் பட்டம் அல்லது பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமை அல்லது கல்விமாணிப் பட்டத்திற்கான தகைமைகளைக் கொண்டுள்ள ஆசிரியர்கள் அ.நி.சு. இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை II இல் 10 ஆம் நிரலின் கீழ் உள்ள சம்பளப் படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அதற்கிணைவான சம்பளப் படிமுறையிலும், பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப் பட்டம் மற்றும் கல்வி முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் அ.நி.சு.இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை II இல் 11 ஆம் நிரலின் கீழ் உள்ள சம்பளப் படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அதற்கிணைவான சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படுவார். |

| தொடர் இலக்கம் | அத்தியாயம் மற்றும் வரிசை | திருத்தங்கள் |
|---|---|---|
| 16 | 14.2(அ) | சேவையின் தரம் 3-I இல் உள்ள பிரமாணக் குறிப்பில் 7:2:2:1 (ஆ) இல் காணப்படும் தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்கள் மற்றும் 1994.10.06 ஆம் திகதியில் இருந்து 2010.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் தரம் 3-II இல் இருந்து 10 வருடகால சேவையின் அடிப்படையில் தரம் 3-I இற்கு பதவி உயர்வு செய்யப்பட்ட, ஆசிரியர் பயிற்சி அல்லது பட்டம் பெற்றிராத ஆசிரியர்கள் தரம் 3-I(இ) இற்கும் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.